**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** — **தலைவர்**
**K.சந்திரசேகரன்,B.A** — **பொதுச்செயலாளர்**
**B.தியாகராஜன், M.Com.,** — **நிதிச்செயலாளர்**

கடித எண்: 23/19
25.01.2019

பெறுநர்,
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : 22-02-2018 தேதியில் கையெழுத்தான ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு திருத்தம் குறித்த ஒப்பந்தம் - பொறுப்புகள் அனுமதிக்கப்படாமை குறித்து முறையீடு.

*********

01-12-2015 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு அமுல்படுத்தப்பட்ட ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு திருத்தம் தொடர்பாக 22-02-2018 அன்று தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)ன் கீழ் வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவர விழைகின்றோம்.

ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் களப்பிரிவு, வருவாய்ப்பிரிவு, மின்கட்டணக் கணக்கீடு மற்றும் வசூல் பிரிவு, பண்டக சாலைப் பிரிவு ஆகியவற்றிற்கு அனுமதிக்கப்பட வேண்டிய பொறுப்புகள் இன்றுவரை அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணமாக மேற்கண்ட பணித்தொகுப்புகளில் உயர்நிலை பொறுப்புகள் அனுமதிக்கப்படாமையால் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பதவி உயர்வுகள் பெறாமலே ஓய்வு பெற்று வருகிறார்கள்.

எனவே புதிய ஒப்பந்தப்படி பொறுப்புகள் அனுமதியினை மேலும் தாமதமின்றி வழங்கிட ஆவன செய்திட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் : 
1. அமைப்புச்செயலாளர், சங்ககிரி
2. தலைவர், கோவை
3. செய்திமடல்.